**அரும்பொருளகம் திறந்திருக்கும் நேரம்**
காலை 10 முதல் இரவு 7 வரை (தினமும்)

*அமைதியான காலைகளில் அரும்பொருளகம் காலை 9 மணிக்கு திறக்கும்*

**கடைசி அனுமதி**
இரவு 6.15 (கண்ணாடி ரொட்டான்டா)
இரவு 6.30 (மற்ற காட்சிக்கூடங்கள்)


**தொடர்பு**
nhb_nm_corpcomms@nhb.gov.sg

**நாங்கள் இணையத்திலும் இருக்கிறோம்!**
nationalmuseum.sg
national.museum.of.singapore
natmuseum_sg

*மேலும் பல சிறப்புக் கண்காட்சிகள், நிகழ்ச்சிகள் பற்றி எங்களது "What's On" கையேட்டில் விவரமறிந்திடுங்கள்!*

இதன் அமைப்பு
National Heritage Board

ஆதரவாளர்
Ministry of Culture, Community and Youth



# National Museum of Singapore

# வரைபடமும் வழிகாட்டியும்

**NMS கைப்பேசி செயலி**
உங்கள் வருகையின்போது சிறந்த அனுபவம் பெற, எங்கள் அரும்பொருளகக் கைப்பேசி செயலியை இப்போதே பதிவிறக்கம் செய்யுங்கள். பிரதான கண்காட்சிகளைப் பற்றிய மேல்விவரங்களும், கலைப்பொருட்களின் தமிழ், மண்டரின், மலாய் விளக்கவரிகளும் உங்கள் விரல்நுனியில் கிடைக்கும்!

Download on the App Store
GET IT ON Google Play
下载 安卓 APK

**நன்கொடையளிக்க எளிய வழி**
சிங்கப்பூரையும் உலகையும் பற்றிய கதைகளுடன் அரும்பொருளகம் தொடர்ந்து அனைவரையும் ஊக்கமளிக்க, ஒவ்வொரு சிறு உதவியும் உறுதுணையாக இருக்கும். மேலாக, வாழ்க்கையின் அனைத்து நிலைகளை சேர்ந்தவர்களை அதிகமாக ஈடுபடுத்தும் வகையில் அரும்பொருளக இடத்தை உருமாற்றுவதற்கு உங்கள் நன்கொடை உதவுகிறது. Giving.sg மூலம் நன்கொடை அளிக்க மேல் காணும் QR குறியீட்டை வருடுங்கள் அல்லது உங்கள் வங்கிச் செயலியில் கீழ் காணும் QR குறியீட்டை வருடுங்கள்.

1 உங்கள் வங்கிச் செயலியை கைப்பேசியில் உட்பதிவு செய்யுங்கள்.
2 வங்கியின் செயலியைப் பயன்படுத்தி PayNow QR குறியீட்டை வருடுங்கள்.
3 நீங்கள் அளிக்க விரும்பும் தொகையைப் பதிவு செய்து. குறிப்பு எண் பகுதியின்கீழ் "NMS" என உள்ளிடுங்கள். பணமாற்றத்தை உறுதிப்படுத்துங்கள்.

**பொதுவான விவரங்கள்**

- உணவு உண்ணவோ பானம் அருந்தவோ கூடாது
- ஒளிக்கீற்றுடன் புகைப்படம் எடுக்கக்கூடாது
- காணொளி படமெடுக்கக்கூடாது
- கலைப்பொருட்களைத் தொடக்கூடாது
- அளவில் பெரிதான பொருட்கள் அனுமதிக்கப்படாது
- மெள்ளப் பேசுங்கள்
- தயவுசெய்து பிள்ளைகளைக் கவனியுங்கள்

அச்சடித்த நேரத்தில் அனைத்து தகவலும் துல்லியமாக பதிக்கப்பட்டது. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை. இந்த கையேடில் பதிக்கப்பட்ட தகவல்களை சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகத்தின் எழுத்துமூல அனுமதியின்றி பகுதியாவோ முழுமையாகவோ மறு பதிக்கப்பட கூடாது. பதிப்புரிமை 2020

# கண்காட்சிகள்



மாடி 1

## சிங்கப்பூர் வரலாற்றுக் காட்சிக்கூடம்

சிங்கப்பூர் வரலாற்றுக் காட்சிக்கூடத்தின் புதுப்பிக்கப்பட்ட கதைக்கூறுகள், காலனித்துவ நாடாக சிங்கப்பூரா என்றழைக்கப்பட்டதிலிருந்து, பிறகு சியோனான்- டோ என்றும் முடிவில் சிங்கப்பூர் என்றும் அழைக்கப்படும் வரையில் நம் தீவு அடைந்த வளர்ச்சியை எடுத்துக்காட்டுகிறது. சிங்கப்பூர் 700 ஆண்டுகளுக்கு முன்பிருந்து, காலனித்துவ ஆட்சிக்கும் ஜப்பானிய ஆக்கிரமிப்புக்கும் உட்பட்டு, போருக்குப் பிந்திய காலகட்டத்தில் பற்பல போராட்டங்களை எதிர்நோக்கி, இன்று நாம் அனுபவிக்கும் உலகமய நகரமாக உருமாறிய பயணத்தை இந்தக் காட்சிக்கூடம் விவரிக்கிறது.

கண்ணாடி ரொட்டான்டா

## சிங்கப்பூர், ஆகப்பழமையான மரம்

சிங்கப்பூர் கலைஞர் ராபர்ட் ஜாவ், சிங்கப்பூரிலுள்ள 17 மரங்களின் படங்களுடன் உருவாக்கியுள்ள இந்தக் கலைப்படைப்பில், நமது உள்ளூர் மரங்களுடன் சிங்கப்பூரர்களுக்குள்ள தனிப்பட்ட இணைப்பை ஆராய்கிறார்.



மாடி 2

## சிங்கப்பூர் வாழ்க்கை: கடந்த 100 ஆண்டுகள்

நவீன காலனி, சியோனானில் உயிர்பிழைப்பு, வளரும் பருவம், சிங்கப்பூரின் குரல்கள் ஆகிய நான்கு காட்சிக்கூடங்கள், கடந்த 100 ஆண்டுகளில் சிங்கப்பூரின் வரலாற்றில் இடம்பெற்ற வெவ்வேறு காலகட்டங்களின் அன்றாட வாழ்க்கையைப் படங்களின் வாயிலாகப் படைக்கின்றன.





மாடி 2

## கோ செங் சூ காட்சிக்கூடம்: மாயாஜாலமும் அச்சுறுத்தலும்

வில்லியம் ஃபாக்கரின் இயற்கை வரலாற்று ஓவியத் திரட்டிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஓவியங்களுடன், பாரம்பரிய தென்கிழக்காசிய சமுதாயங்கள் கடைப்பிடித்துவந்த மாயாஜால, இயற்கைக்கு அப்பாற்பட்ட நம்பிக்கைகளை ஆராய்ந்திடுங்கள்.

# சிறப்புக் காட்சிப்படைப்புகள்



சுசேன் விக்டரின் *ஆடம்பரமாக அசையும் சிறகுகள்*

மாடி 2, கண்ணாடி முகப்பு

## ஆடம்பரமாக அசையும் சிறகுகள்

நூதனமான ஒளியசைவுக்கு ஏற்ப அசைந்தாடி "பாடும்" எட்டு இயக்காற்றல் சரவிளக்குகளின் காட்சிப்படைப்பைப் பாருங்கள்!



டீம்லெப்பின் *கானகத்தின் கதை*

மாடி 2, கண்ணாடி ரொட்டான்டா

## கானகத்தின் கதை


இயல்பைவிடப் பெரிதான இந்த இருவழித்தொடர்பு மின்னிலக்கக் கலைப்படைப்பு, அரும்பொருளகத்தின் மதிப்புமிக்க வில்லியம் ஃபாக்கர் இயற்கை வரலாற்று ஓவியத் திரட்டை ஊக்கமாகக் கொண்டு, அனைத்துலக புகழ்பெற்ற ஜப்பானிய "டீம்லாப்" கலைக்குழுவால் உருவாக்கப்பட்டது. அதிநுட்பத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, ஓவியத் திரட்டிலுள்ள 69 ஓவியங்கள் உயிரோவியங்களாக மாற்றப்பட்டுள்ளன. அவை உயிர்ப்பெற்று, கண்ணாடி ரொட்டான்டா வழியாகச் சென்று வருகையாளர்களுடன் கலந்துறவாடுகின்றன.

1887-ஆம் ஆண்டு தொடங்கிய வரலாற்றைக் கொண்டுள்ள சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகம், நாட்டின் ஆகப் பழமையான, முற்போக்கு சிந்தனையுள்ள அரும்பொருளகமாகத் திகழ்கிறது. இதன் காட்சிக்கூடங்கள் அதிநவீன தொழில்நுட்பத்தையும் பன்னோக்கு வழிமுறைகளையும் பயன்படுத்தி வரலாற்றையும் கலாசாரத்தையும் படைக்கின்றன. சிங்கப்பூரின் கலாசார, கட்டடக்கலை அடையாளச் சின்னமாக விளங்கும் இந்த அரும்பொருளகம், துடிப்புமிக்க சிங்கப்பூர் இரவு விழா உட்பட, ஆண்டு முழுவதும் பற்பல புதுமையான விழாக்களையும் நிகழ்ச்சிகளையும் நடத்துகிறது. அதோடு, மிகவும் முக்கியமான கலைப்பொருள் திரட்டுகளுடன் சிந்தனையைத் தூண்டும் கண்காட்சிகளையும் படைக்கிறது.


சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகம் மூன்று ஆண்டுகால மறுமேம்பாட்டுக்குப் பிறகு 2006 டிசம்பர் மாதம் மீண்டும் திறக்கப்பட்டது. சிங்கப்பூரின் பொன்விழா ஆண்டை முன்னிட்டு, அரும்பொருளகம் அதன் நிரந்தரக் காட்சிக்கூடங்களைப் புதுப்பித்து, 2015 செப்டம்பர் மாதம் மீண்டும் திறக்கப்பட்டது. 2017-ல், அரும்பொருளகம் தனது 130வது ஆண்டு நிறைவைக் கொண்டாடியது.

தேசிய அரும்பொருளகத்தின் தனித்துவத்தை அனுபவித்து, சிங்கப்பூர் வரலாற்றை மீண்டும் பார்வையிட வாருங்கள்.


## மாடி 3





## மாடி 2




## மாடி 1




## அடித்தளம்




- வருகையாளர் சேவைகள்
- அரும்பொருளக அன்பளிப்புக் கடை
- உணவகம்
- அருந்தகம்
- மின்தூக்கி
- கழிவறை
- பாலூட்டு அறை
- பூட்டுள்ள பொருள்காப்புப் பெட்டிகள்
- எஈடி

**உணர்வூக்கம் அதிகமான பகுதிகள்**
மனிதர்கள் அதிகமாகவும், பல்லூடகமும், உரக்கமான ஒலிகளும், மங்கலான வெளிச்சமும் கொண்ட பகுதிகள்

**தற்காலிக கண்காட்சி இடங்கள்**
இவை தற்காலிக காட்சிக்கூட இடங்களாகும். அண்மை நிகழ்வுகளைப் பற்றி விவரமறிய, அன்புகூர்ந்து முதல் மாடியிலுள்ள வருகையாளர் சேவை முகப்பிலுள்ள அலுவலர்களிடம் கேட்கவும்.

**அமைதி அறை**
உங்களுக்கோ உங்கள் பிள்ளைக்கோ சிறப்பு தேவை இருந்தால் எங்கள் வருகையாளர் சேவை அதிகாரிகளை நாடுங்கள்.

**ஓய்விடங்கள் / அமைதியான மூலைகள்**

**அணுகத்தக்க மையங்கள்**

**தேசிய அரும்பொருளக வரலாற்றுப் பாதை**
அரும்பொருளகக் கட்டடம் எவ்வாறு உருமாறியிருக்கிறது என்பதையும் அதன் முக்கிய கட்டடக்கலை அம்சங்களையும் அறிந்திடுங்கள்.

அடையாளங்களுக்கு ஆதரவு
LGT Private Banking

சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகம் அனைவரும் எளிதில் பயன்படுத்தி மகிழக்கூடிய அனுபவத்தை வழங்குவதில் கடப்பாடு கொண்டுள்ளது. எங்களது **அணுக்கத்தக்க வசதிகளையும் சேவைகளையும்*** பற்றி மேல்விவரம் அறிய QR குறியீட்டை வருடுங்கள் அல்லது வருகையாளர் சேவை அதிகாரிகளிடம் பேசுங்கள்!

*உங்கள் அன்புக்குரியவர்களுடன் வருகையளிக்க திட்டமிடுவதற்கு மேற்காணும் வரைபடத்தை நீங்கள் பயன்படுத்திக்கொள்ளலாம். எல்லா காட்சிக்கூடங்களிலும் சக்கர நாற்காலியும் குழந்தை தள்ளுவண்டியும் செல்வதற்கான வசதிகள் உள்ளன. ஆங்கிலம், தமிழ், மண்டரின், மலாய் மொழிகளில் பெரிய அச்செழுத்தில் கிடைக்கும் கண்காட்சி விளக்கவரிகள் எல்லா காட்சிக்கூடங்களிலும் இரவலாகக் கிடைக்கும்.

# கடைகள் மற்றும் உணவும், பானமும்



## ஃபுளூட்ஸ்

திங்கள் – வெள்ளி: காலை 11:30 மணி - மதியம் 2 மணி,
மாலை 6:30 மணி – இரவு 10 மணி
சனி: காலை 10:30 மணி – மதியம் 2:30 மணி,
மாலை 6:30 மணி – இரவு 10:30 மணி
ஞாயிறு: காலை 10:30 மணி – மதியம் 4 மணி
தொலைப்பேசி: (65) 6338 8770
flutes@flutes.com.sg

விக்டோரியா ராணியின் பொன்விழாவை முன்னிட்டு 1887-ல் முதன்முதலாகத் திறக்கப்பட்ட அரும்பொருளகத்தின் ஆகப் பழமையான பகுதியில் அமைந்திருக்கும் “Flutes” உணவகம், ஐரோப்பிய பாணியிலான உணவுப் பட்டியலில் புதுப்புது சுவைகளை அறிமுகப்படுத்தி, பழைய, புதிய உலகின் விருதுபெற்ற பழரசங்களையும் வழங்குகிறது.




## ஃபூட் ஃபோர் தாட்

திங்கள் – ஞாயிறு: காலை 10 மணி – இரவு 7 மணி
(கடைசி கோரிக்கை மாலை 6.30 மணி)
தொலைப்பேசி: (65) 6338 9887
nms@foodforthought.com.sg

சிறுவர் முதல் முதியவர் வரை அனைவருக்கும் உகந்த கதைகள் நிரம்பிய “Food For Thought” தேநீரகம், வடிவமைப்பிலும் உணவு வகைகளிலும் பழைய நினைவுகளையும் புத்தாக்கத்தையும் ஒருங்கிணைக்கிறது.



## மியூசியம் லேபல்

திங்கள் – ஞாயிறு: காலை 10 மணி – மாலை 6 மணி
NHB_museumlabel@nhb.gov.sg

MUSEUM LABEL எனும் அரும்பொருளகக் கடையில், அரும்பொருளகத்தின் திரட்டுகளையும் கண்காட்சிகளையும் மையப்படுத்தும் பொருட்களையும் வெளியீடுகளையும் வாங்கிடுங்கள். அதோடு, MUSEUM LABEL ஆதரவளிக்கும் உள்ளூர் வடிவமைப்பாளர் மற்றும் தயாரிப்பாளர்களின் புதுமையான தயாரிப்புகளும் கைவினைப் பொருட்களும் இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.